# திருக்குடும்ப தேவாலயம் காஜாங்

*11, JALAN GEREJA, 43000 KAJANG*

**தொலைபேசி எண்** : *03-8733 1154*

**அகப்பக்கம்** :*www.hfckajang.org.my* **மின்அஞ்சல்** :*hfckajang@gmail.com*


Scan for updates

பங்கு அருள்பணியாளர் : மறைதிரு. மைக்கல் சுவா
துணை அருள்பணியாளர் : மறைதிரு. போனவென்ச்சர் ராயப்பன்
துணை அருள்பணியாளர் : மறைதிரு. பிலிப் சுவா

கல்லூரி/பல்கலைக்கழக குழு :
சகோ. மார்கிரேட் பெரேய்ரா ஆர்.ஜீ.எஸ்
*pereiramargaret01@yahoo.com*

## பங்கின் திருப்பலி நேரங்கள்

| திகதி | நேரம் | திருப்பலி | குறிப்பு |
|---|---|---|---|
| *03/11/24* (ஞாயிறு) | காலை 7.00<br>காலை 9.30<br>காலை 11.30<br>பிற்பகல் 1.30 | திருப்பலி தமிழ்<br>திருப்பலி ஆங்கிலம்<br>திருப்பலி சீனம்<br>திருப்பலி மலாய் | **பொதுக்காலம் 31ஆம் வாரம் - ஞாயிறு** |
| *04/11/24* ( திங்கள்) | காலை 7.00 | திருப்பலி ஆங்கிலம் | **வார நாட்கள்** |
| *05/11/24* (செவ்வாய்) | காலை 7.00 | திருப்பலி ஆங்கிலம் | **வார நாட்கள்** |
| *06/11/24* (புதன்) | காலை 7.00 | திருப்பலி ஆங்கிலம் | **வார நாட்கள்** |
| *07/11/24* (வியாழன்) | காலை 7.00 | திருப்பலி ஆங்கிலம் | **வார நாட்கள்** |
| *08/11/24* (வெள்ளி) | காலை 7.00 | திருப்பலி ஆங்கிலம் | **வார நாட்கள்** |
| *09/11/24* (சனி) | காலை 7.00<br>மாலை 5.30<br>மாலை 6.00<br>மாலை 7.00 | திருப்பலி ஆங்கிலம்<br>நவநாள் செபம்<br>திருப்பலி ஆங்கிலம்<br>திருப்பலி – யு.பி.எம் | **வார நாட்கள்** |
| *10/11/24* (ஞாயிறு) | காலை 7.00<br>காலை 9.30<br>காலை 11.30<br>பிற்பகல் 1.30 | திருப்பலி தமிழ்<br>திருப்பலி ஆங்கிலம்<br>திருப்பலி சீனம்<br>திருப்பலி மலாய் | **பொதுக்காலம் 32ஆம் வாரம் – ஞாயிறு பங்கில் புதுநன்மை கொண்டாட்டம்** |

**உங்கள் காணிக்கைகளுக்கு மனமார்ந்த நன்றி**
வார இறுதி காணிக்கை 26.10.2024 & 27.10.2024 - RM 16,085.00

### 1.Pesta K.A.M.I. - ArchKL இளைஞர் தினம் 2024

இளைஞர்கள் அனைவரையும் Pesta K.A.M.I. - ArchKL இளைஞர் தினம் 2024- கில் கலந்துக்கொள்ள அழைக்கின்றோம்.
இந்த ஆண்டு திட்டம் நமக்கு நம்பிக்கையை அளிக்கும் இறைவனை சந்திப்பதில் கவனம் செலுத்த முயல்கிறது.
Pesta K.A.M.I. - ArchKL இளைஞர் தினத்தின் கருப்பொருள் : "கர்த்தரை நம்புகிறவர்கள் சோர்வடையாமல் ஓடுவார்கள்" (காண். 40:31)

**திகதி :** 16 நவம்பர் 2024
**நேரம் :** மாலை 1 முதல் இரவு 9 வரை (இரவு உணவு & நினைவு பரிசு உட்பட)
**வயது :** 18-39 வயது வரை
**குறைந்தபட்ச பங்களிப்பு :** RM20(இரவு உணவு & நினைவு பரிசு உட்பட)
**நிகழ்வின் சிறப்பம்சங்கள் :** முக்கிய அமர்வு, தொழில் சாவடிகள், WYD2023 யாத்ரீகர்களிடமிருந்து பகிர்வுகள், நற்கருணை கொண்டாட்டம் மற்றும் புகழாறாதனை.
**பதிவு :** https://asayokl.my/pk24
**பதிவுக்கான இறுதி நாள்:** 9 நவம்பர் 2024

### 2. PMEIA – மதங்களுக்கு இடையிலான செயல்பாடுகள்

திகதி : 10 நவம்பர் 2024 (ஞாயிறு)
நேரம் : பிற்பகல் 12.00 – மாலை 2.00 வரை
இடம் : ஸ்ரீ உச்சி விநாயகர் கோவில், ஜாலான் புக்கிட், காஜாங்,
தமிழ் மற்றும் ஆங்கில திருப்பலிக்குப் பின் இதற்கான பதிவு, ஆலய வாயிலில் நடைபெறும்.

## அறிவிப்புகள் & பங்கின் நிகழ்வுகள்

**3. ஏழைகள்/ஒதுக்கப்பட்டவர்களுக்கான சேவை பற்றி (சொற்பொழிவு –ஆங்கிலம்)**
கருப்பொருள் : சேவையில் அன்பு 'மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்' - மத்தேயு 25:40

**திகதி :** 13 நவம்பர் 2024
**நேரம்:** இரவு 8 மணி - இரவு 10 மணி
**இடம்:** காஜாங் திருக்குடும்ப தேவாலய மண்டபம்
**சொற்பொழிவாளர்:** சகோதரர் ஜேம்ஸ் ஷின், கொட்டாங்னே

சகோதரர் ஜேம்ஸ் ஷின், தென் கொரியாவில் உள்ள கொட்டாங்னே சமூகத்தைச் சேர்ந்தவர். 1976 ஆம் ஆண்டில் தந்தை வூங்-ஜின் ஓவால் நிறுவப்பட்ட கோட்டோங்னே, முதியவர்கள், குழந்தைகள், ஊனமுற்றவர்கள் மற்றும் வீடற்றவர்கள் உட்பட பலதரப்பட்ட தனிநபர்களின் குழுவை ஆதரிப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு விரிவான சமூக நல சமூகமாகும். தென் கொரியாவில் தொடங்கப்பட்ட கொட்டாங்னே அன்னை தெரசாவிற்கும், ஏழைகளுக்கும் ஒதுக்கப்பட்ட மக்களுக்கும் சேவை செய்வதற்கான அர்ப்பணிப்புடன் அவரது கட்டளைக்கு ஒப்பிடப்பட்டுள்ளது. மலேசியாவில் சகோதரர் ஷின் தனது சமூகம் செய்யும் பணிகளைப் பற்றி பேசுவதற்கும், ஏழைகள், வீடற்றவர்கள், நோயாளிகள் மற்றும் முதியோர்களுக்கு சேவை செய்ய அழைக்கப்பட்ட அனைவருக்கும் உத்வேகத்தை வழங்குவதற்கும் நாங்கள் அதிர்ஷ்டசாலிகள். 06/11/2024 க்கு முன் பதிவு செய்ய QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது மேலும் தகவலுக்கு அண்ணா ஓங் 012-206 3818, டோரதி பாங் 012-213 3433 அல்லது ரோஸ் என்ஜி 012-373 9887 அவர்களை தொடர்பு கொள்ளவும்.

**4. இறந்த விசுவாசிகளுக்கான பாவத்தண்டனைக் குறைப்பு வேண்டுதல்**
பாவத்தண்டனைக் குறைப்பு வேண்டுதல் உத்தரிக்கஸ்தலத்தில் உள்ள ஆத்மாக்களுக்கு மட்டுமே பொருந்தும். அது நவம்பர் 1th-8th வரை கொடுக்கப்பட்டுள்ளது

a) நீங்கள் விசுவாசத்தோடு கல்லறைக்கு சென்று மன்றாடினால் ,இருந்தவர்களுக்காக, மனதளவில் மட்டுமிருந்தால்.

b) இறந்த விசுவாசிகளின் நினைவு நாள் அன்று (அல்லது அதை தொடர்ந்து வரும் ஞாயிற்றுக்கிழமை, அல்லது அனைத்து புனிதர்கள் நாள் அன்று) விசுவாசத்துடன் தேவாலயத்திருக்கு சென்று ஆண்டவரின் ஜெபத்தையும் விசுவாச பிரமானத்தையும் அறிக்கையிடவும்.

**நிபந்தனைகள் :**
1. பாவ செயலிருந்து முழு விடுதலை
2. செய்த பாவங்களுலிருந்து 20 நாட்களுக்குள் ஒப்புரவு செய்ய வேண்டும்.
3. 20 நாட்களில் கிறிஸ்துவின் திருவுடலை பெற வேண்டும்.
4. குருவானவர்களுடைய திட்டத்திருக்காக மன்றாடவும் (ஒரு ஆண்டவரின் ஜெபமும் ஒரு அருள் நிறைந்த மரியே ஜெபமும் குறைந்தபட்சாமாக கேட்டுக்கொள்ளப்படுகிறது).

**5. பிக்கோட் சந்திப்பு கூட்டம்**
வரும் நவம்பர் 6 திகதி, (புதன்கிழமை) இரவு 8.30 மணிக்கு, பிக்கோட் சந்திப்பு கூட்டம், பழைய ஆலய அறை 1 மற்றும் 2-ல் நடைபெறும். வட்டார மற்றும் அ.தி.ச பொறுப்பாளர்கள் அவசியம் இச்சந்திப்பு கூட்டத்தில் கலந்துக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். பொறுப்பாளர்கள் வர இயலவில்லை என்றால் அவரின் துணை பொறுப்பாளரை கூட்டத்திற்கு அவசியம் அனுப்பி வைக்கவும்.
நிகழ்ச்சி நிரல்
1. மறைதந்தை மைக்கல் சுவா அவர்களின் உருவாக்கப்பயிற்சி –கிறிஸ்தவர்களின் இறுதிச் சடங்கில் நாம் செய்வதை, ஏன் செய்கிறோம்?
2. இறுதிச் சடங்கு வழிகாட்டுதல்கள்
3. திருஅவையில் வரவிருக்கும் நிகழ்வுகள்
4. பிற விஷயங்கள்



**6. புதுநன்மை கொண்டாட்டம்**
ஆங்கிலம் பேசும் மாணவர்கள் தங்களின் புதுநன்மை திருப்பலி கொண்டாட்டத்தை வரும் நவம்பர் 09 (சனிக்கிழமை) கொண்டாடவுள்ளனர். அதே வேளை தமிழ், சீனம் மற்றும் மலாய் மொழி பேசும் மாணவர்கள் தங்களின் புதுநன்னை திருப்பலி கொண்டாட்டத்தை வரும் நவம்பர் 10 (ஞாயிற்றுக்கிழமை) கொண்டாடவுள்ளனர். அனைவருக்கான பாவசங்கீர்த்தன சடங்கு வரும் 08 நவம்பர் (வெள்ளி) மாலை 7.30 மணிக்கு நடைபெறும்.

**7. திருக்குடும்ப பாலர் பள்ளி**
வயது 5 மற்றும் வயது 6 மாணவர்களுக்கான பாலர் பள்ளி, பதிவு வரும் நவம்பர் 5 முதல் திறக்கப்படும். காலை 8.30 – நண்பகல் 1.00 வரைக்கும் பதிவு நடைபெறும்.

